# ★ புலிகளின் அரசியல் அபிலாஷைகள் குறித்து

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 22 இதழ் 79
யாழ்ப்பாணம் புதன்கிழமை 05 — 05 — 1993

## பேசத் தயார் - விஜயதுங்கா பேட்டி

(லண்டன்)
விடுதலைப் புலிகளின் அரசியல் அபிலாசைகள் குறித்து அவர்களுடன் விவாதிக்கத் தயார் என்று பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பி. பி. ஸி. க்கு நேற்று வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர்கள் மக்கள் ஆட்சிமுறைகளைக் கைபாண்டே அரசுடன் பேசவேண்டும் என்றும் வன்செயல்களுக்கு மத்தியில் அரசியல்வாதிகள் பழக்கப்பட்டு விட்டார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலை தொடர்பாக சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக முதல் கைதியாக சமன் சுஜீவா என்ற சிங்களவரை பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் கொலையில் தொடர்பிருக்கலாமென சந்தேகிக்கப்படும் இவரை பொலிசார் விசாரணை செய்துள்ளனர்.

நேற்று கைதான சமன் சுஜீவா என்பவருக்கும் ஜனாதிபதியை கொலை செய்த தற்கொலைப் படையாளிக்கும்

(2-ம் பக்கம் பார்க்க)

### ● கொழும்பில் தொடர்ந்து பதற்றம்

# இனக்கலவரம் ஏற்படுவதை தடுக்குமாறு சிறிமா கோரிக்கை

## பாதுகாப்பு வழங்க பதில் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)
நாட்டில் மீண்டும் இனக்கலவரம் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அச்ச நிலை குறித்து தமிழர்கள் மட்டு. எம். பி.யிடம் புகார்

(லண்டன்)
கொழும்பில் வாழும் தமிழர்களில் பலர் தமது அச்ச நிலை குறித்துத் தொலைபேசி மூலமும், நேரிலும் தன்னிடம் புகார் தெரிவித்துள்ளதாக மட்டு. மாவட்ட எம். பி. ஒருவர் பி. பி. ஸி. க்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலுள்ள தமிழருக்கு சிங்களவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
கொழும்பில் சில பகுதிகளிலுள்ள தமிழர்கள் சிங்களவர்களால் அச்சுறுத்தப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குணசிங்கபுரம், வாழைத்தோட்டம் உட்பட சில இடங்களில் வசிக்கும் தமிழர்கள் சிங்களவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டதைதொடர்ந்து அங்கிருந்த தமிழர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேபோன்று தென்பகுதியில் ஏனைய இடங்களிலுள்ள தமிழர்கள் பெரும் பதற்றத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

பலர் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் 1983 கலவரத்தையும் ஞாபகப் படுத்தியுள்ளனர். (ந)

## கொலையாளி குருநகர்வாசி பிரேமாவை நன்கு அறிந்தவர்!

(கொழும்பு)
ஜனாதிபதியைக் கொலை செய்த கொலையாளி அடிக்கடி ஜனாதிபதியின் வீட்டுக்கு வந்து போன ஒரு நபரென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளர் மொஹிதீன் என்பவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் குருநகரைச் சேர்ந்த குமாரகுலசிங்கமென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் அடிக்கடி மொஹிதீனுடன் ஜனாதிபதியின் வீட்டுக்குப் போய்வந்ததில் பிரேமதாஸாவும் இவரை நன்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பலர் விசாரிக்கப்பட்டனர்

(கொழும்பு)
ஜனாதிபதி கொலை தொடர்பாக கொழும்பில் பலரிடம் பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளையில் பொலிசாருக்குக் கிடைத்த மற்றொரு தகவலின்படி கொலையாளி

(4-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் கூட்டம் நேற்று நடைபெற்றது

(கொழும்பு)
சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் மரணத்தை அடுத்து நாடாளுமன்றத்தின் விசேட கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதால் அரசியல் அமைப்பு சட்ட விதி

(4ம் பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)
நாடாளுமன்றம் நேற்று கூடுவதற்கு முன் பாதுகாப்புப் படையினர் அங்கு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆயிரக்கணக்கான படையினர் நாடாளுமன்றத்தின் முழுக்கட்டிடத்திலும் அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பதவி நியமனம் 7ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும்

(கொழும்பு)
எதிர் வரும் 7-ம் திகதி காலை 9-00 மணிக்கு ஜனாதிபதி பதவிக்கான நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர்., சிறிமா, ஓலி பிரேமாவுக்கு அஞ்சலி

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவின் பூதவுடலுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் அபேகுணசேகர உட்படப் பல தலைவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கொலை குறித்து ஸ்கொட்லண்ட்யார்ட் விசாரணை

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை குறித்து பிரிட்டனின் 'ஸ்கொட்லண்ட் யார்ட்' விசாரணை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக விசாரணை நடத்த வந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஷெல்'லை உடைத்த மாணவன் உடல் சிதறிப் பலியானார்

(யாழ்ப்பாணம்)
ஷெல் ஒன்றினை எடுத்து உடைக்க முயன்ற மாணவன் ஒருவர் தற்செயலாக அது வெடித்து உடல் சிதறிய நிலையில் ஸ்தலத்தில் பலியான சம்பவம் நேற்று முற்பகல் ஓட்டுமடம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஓட்டுமடம் அராலி வீதியில் வசித்துவரும் குற்றாலிங்கம் சுரேந்திரன் (17 வயது) இவ்வாறு ஷெல் வெடித்து பலியானவராவர்.

காலஞ்சென்றவர் பதுங்கு குழி ஒன்றுக்குள் இருந்து எடுத்த சிறிய


(4ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## தேவை

உங்கள் நிறுவனத்தில் உங்கள் வீட்டில் தமிழ் தட்டச்சு யந்திரம் இருக்கின்றதா? உடன் தொடர்புகொள்ளவும்: நிர்வாகி சமீகர் V. E C கணனி நிறுவனம், விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டி. (சி-79)

அப்பளம், நீலம், குளுக்கோஸ், பேக்கிங் பவுடர் போன்ற பொருட்களை துவிச்சக்கர வண்டியில் கொண்டு சென்று கடைகளுக்கு விற்பனை செய்வதற்கு முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். றெலக்ஸ் இன்டஸ்றீஸ், 222 A கஸ்தூரியார் வீதி, (ராதிகா ஜுவலர்ஸ் மேல் மாடி) யாழ்ப்பாணம். (சி-77)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993 மே 21ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இடைவரவு விரிவுரையாளர்

(அ) கிறிஸ்தவ நாகரிகம்

(ஆ) கிறிஸ்தவவரலாறு (ஐரோப்பா)

கொடுப்பனவு: மணித்தியாலத்திற்கு 150/- ரூபாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு ஏற்ப பயண, உணவுப்படிகளும் வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நாயகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/ நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/ தபால் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1993-04-30.

(எ-3101)

## கோழித்தீன் வெற்றுப் பக்கற்

கோழித்தீன் வெற்றுப் பக்கற் தேவை. மிக்கவைர். (எ-3103)

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள Sony T. V K V 2060, National டெக் EN 7200 விற்பனைக்குண்டு. தொடர்பு:- கி. சந்திரசிவா, தெணியம்பை, வல்வெட்டித்துறை. (சி-78)

## தேவை

அப்பளம் தயாரிப்பதில் நன்கு அனுபவம் பெற்ற ஆண் பெண் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். றெலக்ஸ் இன்டஸ்றீஸ், 222 A கஸ்தூரியார் வீதி. (ராதிகா ஜுவலர்ஸ் மேல் மாடி, யாழ்ப்பாணம். (சி-76)

## ஜோதிட விஞ்ஞானம்

வெள்ளி தெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கினும், ஏழரைச் சனி நடுக்கூறு. அட்டமத்து வியாழனுடன் மாரகம் செய்யுமென முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளது. வெள்ளி பிறக்கும்போது மாரகஸ்தானத்திலிருந்தது. மூன்றாவது 7½ச் சனி, வெளிரியால் மரணச் சனியாகிறது. "இராகிப் டலன்கல்" விற்பனையாகிறது. சத்தியா—கட்டுடை. (சி- 82)

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணவியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய மாதாந்த திருவிளக்குப்பூசை, சுமங்கலி பூசை இன்று புதன்கிழமை மாலை பூரணை தினத்தன்று விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

0 0

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய சித்திரா பூரணை விழா இன்று புதன்கிழமை காலை விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

0 0

(கொழும்புத்துறை

கொழும்புத்துறை ஆத்திப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேகம் பூசை சித்திரா பூரணை தினமாகிய இன்று ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். -134

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் திருவிளக்குப்பூசை இன்று புதன்கிழமை மாலை 4 00மணிக்கு இடம்பெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சாந்தசாயி பஜனை நிலயம் வண்ணைப்பண்ணை மேற்கு முதலாண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை அதிகாலை 4.00மணிக்கு ஓங்காரம், சுப்பிரபாதம், நகரசங்கீதனம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகும்.

காலை 8.30 மணிதொடக்கம் 12 00 மணிவரை புத்தகக் கண்காட்சிகள் இடம் பெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் பௌர்ணமி கலை விழாவும் பரிசளிப்புவைபவமும் இன்று 5ம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நிலையத்திறந்த வெளியரங்கில் நடைபெறும். -154

0 0

(பருத்தித்துறை)

கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலய சமய வளர்ச்சி மன்றத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட "ஆலய வழிபாடு" சிறப்புச்சொற்பொழிவு இன்று 5-ம் தேதி பி. ப. 5 மணிக்கு நடைபெறும். -52

0 0

(அரியாலை)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று புதன் கிழமை அடியார்களுக்கு குளிர்த்தி கஞ்சி வழங்கப்படவுள்ளது. -59

0 0

(மானிப்பாய்)

மானிப்பாய் கோலக்கைப் பிள்ளையார் சண்டிலிப்பாய் சீரணி நாகம்மை ஆலய ரதோற்சவம் இன்று புதன் கிழமை பகல் நடைபெறும். -71

## 2 கிலோ சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம் யாழ். மாவட்ட மக்களுக்கு உலர் உணவு அட்டை ஒன்றுக்கு இரண்டுகிலோ சீனி கிலோ 27-80 வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான வழங்கல் கட்டளையை பெற்றுக்கொள்ளுமாறு ப.நோ.கூ. சங்கங்களுக்கு செயலக புனர்வாழ்வு கிளை அறிவித்துள்ளது. (159)

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை 5ம் திகதி நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீட்புநிதி கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக்கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## பிரேமா கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிருக்கலாமெனவும் விசாரணை தொடருமெனவும் பொலிஸ் அதிகாரி லயனல் குணதிலக தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சொந்த இல்லத்திற்கருகில் சமன் சுஜீவ னிலைக்கடை வைத்திருப்பரென்றும் சஜீவா தான் கொலைக்கு தொடர்பானவராக இருந்திருக்கலாமென பொலிசார் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இ-இ)

## புலிகளின் அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தேவேளை இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இலங்கை அரசு இதுவரை கடைப்பிடித்து வந்த அணுகுமுறையில் எந்தவித மாற்றமும் இருக்கப்போவதில்லை என்று அவர் நேற்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த வேறுபேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கைபிரச்சினை ஒரு இனப் பிரச்சினையல்ல இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே ஆகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ரி-க)

## கொலையாளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து வைத்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்தவேளையில் மொஹிதீனின் வீட்டை பொலிஸார் நேற்று திடீரென சோதனை யிட்டனர்.

அங்கிருந்து பல போட்டோ அல்பங்களை தாம் எடுத்து சென்றிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

மேதின குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஜனாதிபதியுடன் மொஹிதீனும் பலியானது தெரிந்ததே. (இ)

# 'சுதந்திரப் பறவைகள்' இன்று வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

'சுதந்திரப் பறவைகள்' வைகாசி மாதத்துக்கான இதழ் இன்று வெளிவருகின்றது.

போராட்டப் பறவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பறவை மறு தோளிலுமாக உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்" என்று தொடரும் தலைவர் வே.பிரபாகரனின் கருத்துக்களும் சமவேலைக்குச்சம ஊதியம் 'மே' தினத்தில் அறைகூவல் என்ற பிரதான தலைப்புச் செய்தியும், 'சீதனமும் பெண்களும்' உழைக்கும் பெண்கள் எதிர்நோக்கும் இடர்கள் என்ற கட்டுரைகளோடு சிறுகதை கவிதைகள் நூல் அறிமுகம் போன்ற அம்சங்களோடு இந்த இதழ் இன்று வெளிவருகின்றது.

இதுவரை காலமும் புத்தக வடிவில் வந்த 'சுதந்திரப் பறவைகள்' இதழ் இப்பொழுது பத்திரிகை வடிவத்தில் அழகிய முறையில் வெளிவருகின்றது. (சு-சி)

## மாட்டு வண்டில் சவாரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் பெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி இம்மாதம் 9ம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு நீர்வேலி சவாரி மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது. போட்டிகள் ஏ பி. சி. என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு யாழ். மாவட்டச் செயலகம், கோண்டாவில் என்ற முகவரியில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# 1993 ம் ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

1993-ம் ஆண்டு வதிவிட வேளாண்மைப்போட்டி முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. இப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:

சங்கானை வட்டம் 1 சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் வட்டுக்கோட்டை, 2 வீரசிங்கம் குகநேசன் சங்கானை, 3 அந்தோனி ஆனந்தராசா சங்கானை.

ஆறுதல் பரிசு: விநாயகமூர்த்தி பிரசாத் சுழிபுரம் மேற்கு, பூமாதேவி ஜீவரத்தினம் சங்கானை, நாகையா ஜெகதீசன் சங்கானை, சந்திரசேகரம் ஞானேஸ்வரி சுழிபுரம் மேற்கு. மாணிக்கம் கணேஸ் சங்கானை, நாராயணபிள்ளை சுதந்திரராசா சித்தன்கேணி, ஆறுமுகம் ஜெயராஜா மூளாய் தெற்கு, குட்டியன் இருபன் நிற்சாமம், தம்பு பத்மினி சங்கானை கிழக்கு. சிதம்பரநாதன் குகானந்தன் சித்தன்கேணி.

கரவெட்டி வட்டம்: 1. தம்பிப்பிள்ளை சரவணபவானந்தன் கரணவாய் வடக்கு 2 குமாரசாமி புனிதாம்பிகை கரணவாய் மத்தி, 3. செ. நடராஜா துஸ்யந்தன் நெல்லியடி.

ஆறுதல் பரிசு: சிவபுண்ணியம் மயில்வாகனம் நெல்லியடி வடக்கு, முருகேசு சுந்தரலிங்கம் அல்வாய் கிழக்கு. பூமாதேவி சோமமூர்த்தி கரவெட்டி மத்தி, கனகசபை கனகசபாபதி இலகடி அத்தாய், கோபாலகிருஷ்ணன் சஞ்சீவன் கரணவாய் தெற்கு. வல்லிக்குட்டி சண்முகலிங்கம் அல்வாய் தெற்கு, தங்கராசா கருணாகரன் இலகடி அத்தாய், சிவப்பிரகாசம் பொன். சிவநேசன் கப்பூது. பாலசுப்பிரமணியம் நவநீதன் கரவெட்டி மத்தி, கந்தையா கணபதிப்பிள்ளை அல்வாய் கிழக்கு.

பருத்தித்துறை வட்டம்: 1. ஆறுமுகம் சிவபாலகிருஷ்ணன் மந்திகை, 2. தங்கராசா யோகேஸ்வரி அல்வாய் வடக்கு. 3 வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை புலோலி மேற்கு.

ஆறுதல் பரிசு: வாசுகி மாணிக்கராசா புலோலி வடகிழக்கு, கனகசபை தில்லையம்பலம் பருத்தித்துறை தெற்கு. முருகுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் வியாபாரிமூலை, தர்மபாலசிங்கம் குருபரன் தும்பளை ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு புலோலி வடக்கு, பதிமநாதன் அருட்பிரகாசம் புலோலி வடக்கு, பரஞ்சோதி சற்குணநாதன் வியாபாரிமூலை, வைத்திலிங்கம் தங்கவேல் கொம்மாந்துறை. யோ. ராஜேஸ்வரி மந்திகை சபாரத்தினம் கணநாதன் அல்வாய் வடக்கு.

மருதங்கேணி வட்டம்: 1. சிவஞானம் நவமணி குடத்தனை மேற்கு. 2. கணபதிப்பிள்ளை கந்தசபேசன் அம்பனை, 3. சுப்பிரமணியம் செல்வகிருஸ்ணன் தாளையடி.

(தொடரும்)

உ

சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு
இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய

**அலங்கார உற்சவ**
**10ம் நாள் பூர்த்திவிழா**

05-05-1993 புதன் இரவு விசேட நிகழ்ச்சிகள்

சாவகச்சேரி இத்தியடி இந்து இளைஞர் மன்றம் மேற்படி ஆலயத்தின் உற்சவகாலத்தின் போது நடாத்திய இந்து சமயப் போட்டியின் பரிசில் வழங்கல் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மங்கள இசையும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. மெய்யடியார்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து அருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

விசேட நிகழ்ச்சி

யாழ். அரியாலை ஸப்தஸ்வரா இசைக்குழு வழங்கும்
**இன்னிசை வார்ப்புக்கள்**

நன்றி.
இந்து இளைஞர் மன்றத்தினர்,
சாவகச்சேரி கிழக்கு,
இத்தியடி.

05-05-93. (இ-85)

# அரச, ராணுவ மரியாதையுடன் நாளை மாலை பூதவுடல் தகனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசவின் மரணச்சடங்குகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் பூரண அரச, இராணுவ மரியாதைகளுடன் இடம்பெறும்.

பூதவுடல் இன்று காலையும் ஜனாதிபதி மாளிகையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இன்று காலை 6 மணி முதல் நாளை காலை 10 மணிவரை பொதுமக்கள் அஞ்சலி செலுத்த முடியும்.

மரணச்சடங்குகள் நடைபெறும் தினமாகிய நாளை அரசாங்க வர்த்தக வங்கி விடுமுறைதினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது ஜனாதிபதியின் இறுதி யாத்திரை நாளை மு.ப 11 மணிக்கு ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஆரம்பமாகும். ஊர்வலம் டி. பி ஜெய திலக மாவத்தை, யார்க்வீதி, லோவசதாம் வீதி, ஒல்கொட் மாவத்தை, சங்கராஜ மாவத்தை, பஞ்சிகாவத்தை வீதி, மருதானைச் சந்தி, மருதானை வீதி, குயின்ஸ் வீதி, அலெக்ஸ்ஸாடர் கோல், ரொறிங்ரன் சதுக்கத்தின் வழியாக சுதந்திர சதுக்கத்தை சென்றடையும்.

வழிநெடுகிலும் பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்குகளை பொலிசார் கவனிப்பர். ஈமைக்கிரியைகளுக்கு பல லட்சக்கணக்கான மக்கள் கூடுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மரணச்சடங்கில் மதத் தலைவர்கள், கொழும்பு மாநகர முதல்வர், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன உட்பட பல தலைவர்கள், பதில் ஜனாதிபதி திரு டி.பி. விஜய துங்க உரைநிகழ்த்துவர். குடும்பஅங்கத்தவர் ஒருவர் நன்றியுரை நிகழ்த்துவார். (இ)

# 10 லட்சம் மக்கள் ஜனாதிபதிக்கு அஞ்சலி

(கொழும்பு)

ஜனாதிபதியின் கஸரித்த மாவத்த இல்லத்தில் நேற்று முன்தினம் இரவுவரை சுமார் பத்து லட்சம் மக்கள் ஜனாதிபதியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அவருக்கு அஞ்சலிசெலுத்துவதற்காக நேற்று முன்தினம் அதிகாலை முதலே பல்லாயிரக்கணக்கானோர் சுமார் 6 மைல் தூர 'கியூவில்' நின்றதாக செய்திகள் தெரிவித்தன.

நாட்டின் பல்வேறு பகுதியிலுமிருந்து பல்லாயிரக்கணக்கானோர் ரயில், பஸ் மூலம் நேற்று மாலையிலும் தலைநகரில் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். (இ)

# சைக்கிளை பிடித்தபோது குண்டு வெடித்தது

(கொழும்பு)

ஜனாதிபதியின் உதவியாளர் மொகைதீன் கொலையாளியை பிடித்தபோது குண்டுவெடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேதின ஊர்வலத்தில் வீதியோரத்தில் நின்ற சைக்கிள் இளைஞர் திடீரென ஜனாதிபதியின் வாகனத்தை நோக்கி சைக்கிளுடன் ஓடிவந்தார். அப்போது அந்த இடத்தில் நின்ற மொகைதீன் பாய்ந்து சைக்கிளை பிடித்து தடுத்து நிறுத்தினார். உடனே பாரிய சத்தத்துடன் குண்டுவெடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# சூரிய அஸ்தமனத்தின் பின் தமிழ் அகதிகள் வெளியேறத் தடை

(சென்னை)

தமிழகத்தில் இலங்கை தமிழ் அகதிகள் சூரிய அஸ்தமனத்தின் பின் தாங்கள் தங்கியுள்ள அகதிமுகாம்களிலிருந்து வெளியேறத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர உத்தரவை தமிழக அரசு அந்தந்த முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு விடுத்துள்ளது.

இதேவேளை தமிழ் அகதிகளின் நடமாட்டங்களை பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

அகதி முகாம்களிலுள்ளோருக்கும் வெளியார்க்கும் இருக்கும் தொடர்புகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

அண்மைக்காலமாக இந்த நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# தமிழக கரைகளில் பலத்த பாதுகாப்பு

(சென்னை)

தமிழகம் இராமநாதபுரம் கடலோர பகுதிகளில் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு போடப்பட்டுள்ளது. கடலோர ரோந்துப் பணிகளை அதிகரிப்பது குறித்தும் தென்பிராந்திய கடற்படைத்தளபதி அவசர மாநாடு கூட்டியுள்ளார்.

இராமேஸ்வரம் அருகிலுள்ள கடற்பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் ஒவ்வொரு நாளும் இரண்டு முறை நடுக்கடலில் தேடும் பணி நடைபெற்று வருவதாக காவல்துறை கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 15 சோதனை சாவடிகள் 'வயலஸ்' கருவி மூலம் தொடர்புகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் காவலர்களுக்கு தானியங்கி துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு நடத்தும் முன்னோடித் தேர்வுகளான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்கள் தமதுவிண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 7ந் திகதிக்குமுன்பதாகக் கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு பிரதேசக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். 159

# தமிழீழ போராட்டத்திற்கு இராமதாஸ் ஆதரவு

(சென்னை)

தமிழீழப் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிப்பதாக இக்கட்சியின் தலைவர் எஸ். ராமதாஸ் தெரிவித்தார்.

வன்னியாகுமரியில் பாட்டாளி மக்கள்கட்சியின் செயற்குழு கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தமிழீழப் பிரச்னை குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில், விடுதலைப்புலிகளையும், அவர்களது தமிழீழப் போராட்டத்தையும் பாட்டாளி மக்கள்கட்சி ஆதரிப்பதாகத் தெரிவித்தார். (இ)

# வன்முறையாளர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தின்போது இடம்பெற்ற அசம்பாவிதங்கள், தீவைப்புகளில் சம்பந்தப்பட்டவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என்று கொழும்பு பிராந்திய பொலிஸ்மா அதிபர் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட 15 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு சிகிச்சைபெற்று வருகின்றனர். 6 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-இ)

# 'ஜெ' வீட்டின் மேலாக விமானம்; தி. மு. க. சந்தேகம் எழுப்புகிறது

(சென்னை)

இந்திய விமானப்படையின் தாம்பரம் விமான தளத்தையும் மீறி 'ரடார்' கண்காணிப்பையும் தாண்டி இப்படி ஒரு விமானம் பறந்திருக்க முடியுமா என தி மு க. வினு எழுப்பியுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா வீட்டின் மேலாக விமானம் ஒன்று வட்டமிட்டதாக கூறப்படுவது பற்றி கருத்து கூறுகையில் தி. மு. க இவ்வாறு வினு எழுப்பியுள்ளது.

இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் உலகின் எந்தமூலையிலுமுள்ள தீவிரவாதிகள் இந்தியாவினுள் விமானமூலம் ஊடுருவவாய்ப்பிருக்க முடியுமா எனவும் தி. மு. க.கேட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இத்தகைய சம்பவம் ஒன்று நடந்திருந்தால் அது கண்டிக்கத்தக்கது என்று கூறும் தி.மு.க. என்றாலும் இது குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கூறியுள்ளனர். -இ

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் ஆண்டு இளைஞர் மன்றத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். -59

## இராசி பலன்

05-05-1993

புதன்கிழமை

(தமிழுக்கு சித்திரை 22)

சதுர்த்தசி ந. ப. 11-48 வரை, சித்திரை காலை 7-43 வரை, இராகுகாலம் காலை 11-56 முதல் 1-25 வரை, சுபநேரம் மாலை 4-26 முதல் 5-26வரை, சித்தயோகம் சித்திரகுப்த விரதம்.

மேஷம்: உறவினர் மூலம் தனலாபம், கௌரவம், வெளியூர் நட்பு.

இடபம்: அறிவுக் கூர்மை, பெண் லாபம், கலந்துரையாடல்.

மிதுனம்: பயண தடங்கல், வீண் அலைச்சல், மனக்குறை.

கடகம்: நிலைமைக் குறைவு, இடம் மாறுதல், வயிற்றுவலி.

சிங்கம்: தொழில் சிறப்பு, வாக்கு வசீகரம், மனக்களிப்பு.

கன்னி: கோள் சொல்லுதல், நண்பர் விரோதம், வெறுப்பு.

துலாம்: தீயநோக்கம், புதிய திட்டம், பணமுடை.

விருச்சிகம்: தொழில் போட்டி, கடும் பகை, காரிய தடை.

தனுசு: நண்பர் மூலம் மகிழ்ச்சி, திட்டமிடுதல், காரிய பலிதம்.

மகரம்: மனைவி பெருமை, சத்துரு வெற்றி, தொழில் பெருமை.

கும்பம்: வீண் சச்சரவு, கோப வார்த்தை, வெறுப்பு

மீனம்: இடையூறுகள், உடல் உபாதை, குடும்ப தொல்லை.

— ஜோஸ்யர்

# இனப் பிரச்னையை நீங்களே தீர்க்கவேண்டும்

## அமெரிக்க தூதர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னை இலங்கை மக்களது பிரச்னை என இலங்கைக்கான அமெரிக்க தூதர் திருமதி ரொசிக்கா சேவஸ் கூறியுள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: இலங்கை இனப்பிரச்னையை இலங்கை மக்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். வேறு யாராவது வந்து தீர்த்து விடுவார்கள் என நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. இப்பிரச்னையை தீர்க்க ஒவ்வொரு மக்களும் முழுமனதுடன் பாடுபட வேண்டும் என்றார். (இ)

# மதுரையில் — பொலிஸார் மீது குண்டுத் தாக்குதல்

(சென்னை)

மதுரை கொட்டாம்பட்டியில் நேற்று முன்தினம் காலை பொலிசார் மீது வெடிகுண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

கொட்டாம் பட்டியில் சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் தர்மராஜா என்பவரை பொலிசார் கைது செய்யச் சென்றபோதே மேற்படி குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பொலிசார் திருப்பி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் தர்மராஜன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டாராம். (சு-இ

# இன்று — வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரைப் பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

சித்திரை பூரணை தினமாகிய இன்று 5ம் திகதி புதன்கிழமைகாலை யாழ். வில்லூன்றி புனித தீர்த்தத்திற்கு வில்லூன்றி விநாயகர் எழுந்தருளும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

புனித தீர்த்தப் பெயர்ப் பலகையை யாழ். அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் திரை நீக்கம் செய்கிறார். உதவி அரசாங்க அதிபர் கா. குணராசா தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ள பொதுக் கூட்டத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள், யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கம், கலாநிதி பா. கோபாலகிருஷ்ணன், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் ஆகியோரின் உரைகள் இடம்பெறுவதோடு, அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் "தெய்வம் என்பதோர் சித்தை என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுகிறார். (சு)

# அமெரிக்கா மீது கண்டனம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 309 என்ப் சட்டத்தின் கீழ் 'தண்டிக்கப்பட வேண்டிய நாடுகள்' பட்டியலில் இந்தியாவையும் அமெரிக்கா சேர்க்க முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் இந்த முடிவை இந்தியாவில் பல கட்சிகளும் வன்மையாக கண்டித்துள்ளதுடன் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துமுள்ளன. (சி)

# ★ இந்தியாவில் மீண்டும் மதக் கலவரம்:
# பலர் உயிருடன் தீமூட்டி எரிப்பு
# 100 பேர் பலி; 300 பேர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவில் மீண்டும் மதக் கலவரங்கள் வெடித்துள்ளன. நேற்று முன்தினம் இந்தியாவின் வடபகுதி மாவட்டமான மணிப்பூரில் இந்துக்களும், முஸ்லீம்களும் மோதிக் கொண்டனர்.

இப்பகுதியில் மூன்று இந்துத் தீவிரவாதிகள் முஸ்லீம்களிடம் பணம் கேட்டதைத் தொடர்ந்தே கலவரங்கள் ஆரம்பமானது.

இக் கலவரங்களின் போது கட்டிடங்கள் பலவற்றிற்குத் தீ வைக்கப்பட்டதாகவும், பெருமளவு உடைமைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலகுடிசைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. பலர் உயிருடன் தீமூட்டிக் கொளுத்தப்பட்டனர். இவர்களது சடலங்கள் மணிப்பூர் பல்கலைக் கழக வளாகத்திலும் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மதக் கலவரங்களைத் தொடர்ந்து மணிப்பூர் நகருக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரை பாதுகாப்புக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளது. (ரி)

## சந்தனமர கடத்தல்வீரப்பன் இராணுவத்திற்குச் சவால்

(சென்னை)

கர்நாடாக, தமிழக எல்லைப் பகுதியிலிருந்து சந்தனக் கட்டை கடத்தலில் ஈடுபட்டு வரும் 43 வயதான வீரப்பன் இராணுவத்திற்கும் சவால் விடுத்துள்ளார்.

இராணுவமே வந்தாலும் தமமை பிடிக்கமுடியாதென அவர் கூறியிருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீரப்பனை பிடிக்கக் கூடிய தகவலை கொடுப்பவர்களுக்கு 50 லட்சம் ரூபா வழங்கப்படுமென தமிழக கர்நாடக அரசுகள் அறிவித்திருப்பதும் தெரிந்ததே. (சி)

## குண்டு வெடிப்புக்களும் சைக்கிளுக்கும் தொடர்பில்லை

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு முன் வடபகுதியிலிருந்து கொழும்பு வந்து வாழைத் தோட்டத்தில் வாழ்ந்த தமிழர் ஒருவரே ஜனாதிபதி பிரேமதாஸா கொலையின் சந்தேக நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பிரேமதாஸாவின் கொலைக்கும்சைக்கிளுக்கும்எந்தவித தொடர்பும்இல்லையென வும் பொலிஸார் இப்போது கண்டுபிடித்துள்ளனர்

சந்தேகநபர் வாழைத்தோட்ட ஐக்கிய தேசியக்கட்சிக் கிளையின் உறுப்பினராக அதே மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்டுள்ளார்.

அவர் அந்த ஊர்வலத்தில் முன்னணியில் வந்து கொண்டிருந்தபோது ஜனாதிபதியின் ஊழியர்கள் அவருடன் அளவளாவியுள்ளனர்

இந்தச் சந்தர்ப்பத்திலேயே சந்தேகநபர் மேலும் முன்னேறி வந்த போது குண்டு வெடிப்பு இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## ஜெயலலிதா வீட்டின் மேல விமானம் பறக்கவில்லை

(சென்னை)

சென்னை விமானப்போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையத்தின் கண்காணிப்பை மீறி எந்த ஒருவிமானமும் நகருக்கு மேல் பறந்திருக்க முடியாது என்று சென்னையிலுள்ள சிவில் விமானத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2-09 மணி முதல் 4-00 மணி வரை சென்னை நகருக்கு மேலாக எந்தவித விமானமும் பறக்கவில்லையென்றும் அவை தெளிவுபடுத்தியுள்ளன.

இன்டர் ரக மர்ம விமானம் ஒன்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் இல்லத்திற்கு மேலாக வட்டமிட்டுப் பறந்ததாக மாநில அரசு விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் சென்னை விமான நிலைய இயக்குநர் எஸ். எம். தாஸன் இதனைத் தெளிவுபடுத்தினார். (ரி)

### கொழும்பில் பலர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை வாசி எனவும் பலலொறிகளுக்குச் சொந்தக்காரர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு உணவுப்பொருள்களை இவர் கிரமமாக ஏற்றி வந்தவர் எனவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

### ஜே. ஆர். சிறிமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசாவின் பூதவுடல் நேற்று அவரது சுசரித்த என்ற இல்லத்திலிருந்து ஜனாதிபதி மாளிகைக்கு மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

லட்சக்கணக்கான மக்களும் மற்றும் தலைவர்களும் ஜனாதிபதி மாளிகையில் வைத்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர். (இ-ரி)

### ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார்.

நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள உறுப்பினர்களின் தொகை 225 ஆகும் அதில் ஐ. தே. கவில் 125 பேரும், எதிர்க்கட்சியில் 100 பேரும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

### பலத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

பொலிஸ் கமாண்டோப் படையினர் நவீன கண்டு பிடிப்பு சாதனங்களுடன் நாடாளுமன்றம் முழுவதும் சல்லடை போட்டு தேடினர். இராணுவத்தினர் பொது மக்கள் வரிசையையும் தீவிரமாக சோதித்தனர். (இ)

## ஜப்பான் முன்னாள் பிரதமர் ஜனாதிபதிக்கு இறுதி அஞ்சலி

(கொழும்பு)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் டொஷிகிஇயூ ஜப்பானிய சக்கரவர்த்தியின் விசேஷ பிரதிநிதியாக ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரிகைகளில் கலந்துகொள்வார்

இவருடன் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனின் பிரதிநிதியாக அமெரிக்க வர்த்தக அமைச்சர் வெளிநாட்டு அலுவல்கள் பிரிவைச் சேர்ந்த உயர்அதிகாரிகள் குழு ஒன்றும் பாகிஸ்தான் அரசு சார்பில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பும் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டது,

இறுதிக் கிரிகைகளில் கலந்துகொள்ளும் தலைவர்களும், குழுக்களும் இன்று வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## வெளிநாட்டுத் தலைவருக்கு தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ள இங்குவருவுள்ள வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் அவர்களின் விசேஷ பிரதிநிதிகளுக்கும் தீவிர பாதுகாப்பு வழங்கப்படும்.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர்களிடம் இதனைத்தெரிவித்தார். (இ)

### ஜனாதிபதி கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஸ்கொட்லண்ட்யாட்' குழுவினரே இந்த விசாரணையிலும் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை இக்கொலை தொடர்பாக சந்தேகிக்கப்படும் இறந்த ஒருவரின் கழுத்தில் சயனைட் குப்பி இருந்ததால் அவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனவும் பொலிஸ் அதிகாரி வயனல் குணதிலக கூறியுள்ளார்' (ரி)

### நாடாளுமன்றக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின்படி இந்த விசேட கூட்டம் நடைபெறுவதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சகல உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தினார்.

சபாநாயகர் எம். எச். மொகமட் சபையில் விசேட அறிக்கை ஒன்றையும் விடுத்தார்.

நாடாளுமன்றம் இம்மாதம் 7-ம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுபதில்ஜனாதிபதிடி.பி. விஜேதுங்காவை திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்க சந்தித்த போது இந்த வேண்டுகோளைவிடுத்தார்.

எந்தக் கட்டத்திலும் இந்த நாட்டில் மீண்டும் ஒரு இனக் கலவரம் ஏற்படக்கூடாது அதனைத் தடுப்பதற்கு அரசு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கு ஒரு தமிழர் மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பதால், கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள தமிழருக்குச்சொந்தமானவீடுகள், வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதையடுத்தே திருமதி பண்டாரநாயக்க இந்த நாட்டில் ஒரு இனக்கலவரம் ஏற்படுவது தடுக்கப்படவேண்டும் என கோரியுள்ளார்.

இதேவேளையில் இனக்கலவரம் ஒன்றில் ஈடுபடுவதை பொதுமக்கள்சகலரிதத்திலும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரி இன்று பொதுமக்களையும் திருமதி பண்டாரநாயக்க விசேஷ அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக்கொள்ள உள்ளார்.

இனக்கலவரம் ஏற்படாமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தமது அரசு மேற்கொள்ளும் என திரு. விஜேதுங்க திருமதி பண்டாரநாயக்காவுக்கு உறுதியளித்துள்ளார். (இ-ரி)

## உலகத் தலைவர்கள் கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் படுகொலையை கண்டித்து பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர் கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன், பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன்பால் அருளப்பர் உட்பட பல உலகத்தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ)

### ஷெல்லை உடைத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழைப்பொத்தி வடிவிலான ஷெல்லினை நேற்று முற்பகல் எடுத்து வந்து வீட்டின் பின்புறமாக இருகால்களுக்கிடையில் வைத்து உடைத்தார். பெரும் சத்தத்துடன் ஷெல் வெடித்ததோடு உடல் சிதறிய நிலையில் உயிரிழந்து காணப்பட்டார் இவருடன் கூட இருந்த இரண்டு வயதுக் குழந்தை எதுவித காயமுமின்றி உயிர் தப்பியது. மற்றொரு 4 வயது குழந்தையான வினிதா சிறியகாயங்களுக்குள்ளானார். (56-ரி)

### அச்ச நிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தலைநகர் கொழும்பில் தமிழர்கள் தாக்கப்படலாம் என்ற காரணத்தினால், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பதில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவை நேரில் சந்தித்தேன் அவரிடம் 1983 ஆம் ஆண்டில் நடைபெற்ற கலவரப்பீதி இன்றும் தமிழர் மத்தியில் பசுமையாகவே இருக்கின்றன. மீண்டும் அப்படியான ஒரு நிலை ஏற்படலாமோ என அச்சம் கொண்டுள்ளனர். சில இடங்களில் அச்சம் காரணமாகத் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தும் வருகிறார்கள். சில தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடப்படுவன. எனவே தகுந்த பாதுகாப்பு வழங்கி, கலவரநிலை ஏற்படாதவாறு பார்க்குமாறும் கேட்டுக்கொண்டேன்.

இதற்குப் பதில் ஜனாதிபதி அவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும், இராணுவமும், பொலிசும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அசம்பாவிதம் ஏதும் நடைபெறுமல் பார்த்துக்கொள்வர் என்றும், தமிழ் மக்கள் பீதியடையாமல் இருக்குமாறு கூறும்படிகூறியுள்ளார். (கே-வி)


# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்!

## உப பரிசோதகர்/காவலர் தரங்கள்

| | | |
|---|---|---|
| கல்வித் தகமை | :- | 8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர் தரம்) வரை |
| உயரம் | :- | 5' 6" |
| வயது | :- | 18 தொடக்கம் 30 வரை |

மேற்கூறிய தகமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 15-05-93ந் திகதி வரை பழைய பூங்கா காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகந்தரவும் தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்வுக்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகந்தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

நடுவப் பணியகம்,
தமிழீழ காவல்துறை, தமிழீழம்.

(ஏ-3102)


இப்பத்திரிகை; "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under licence Number B/10336/R